[2004 ஜூலை 31

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 118, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

118—

ஆவின் பால் உறைகள்

***32037—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உபயோகப்படுத்தப்பட்ட ஆவின் பால் உறைகளை மீண்டும் பயன்படுத்தி சில தனியார் போலி பால் தயாரிப்பதாக அரசுக்குப் புகார் ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அவர்கள் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) சில தனி நபர்கள் பாலில் தண்ணீர் கலப்பதுடன், உபயோகப்படுத்தப்பட்ட ஆவின் பால் உறைகளையும் மீண்டும் பயன்படுத்துகிறார்கள் என்று புகார்கள் வந்துள்ளன.

(ஆ) அவர்கள்மீது காவல் நிலையத்தில் புகார் செய்யப்பட்டு குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே கேள்வியாகவே கேட்டு விடுகிறேன். இப்படி எத்தனை பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்? எத்தனை வழக்குகள் தற்போது பதிவு செய்யப்பட்டுள்ளன? தனியார் பால் ருசியாகவும், பால் அதிக நாட்கள் கெடாமல் நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காகவும் Hydrogen Per Oxide, Caustic soda, Sona seal போன்ற இரசாயனப் பொருட்கள் கலக்கப்படுகின்றன. இது குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை உட்கொள்கின்ற உணவு என்பதால், இதனால் குடற்புண் போன்ற நோய்கள் உருவாகின்ற வாய்ப்பு இருக்கிறது. எனவே, தனியார் பாலுக்குத் தரக் கட்டுப்பாடு நிர்ணயம் செய்யப்படுமா? தமிழகத்திற்குத் தேவையான அளவிற்குப் பால் கொள்முதல் உள்ளதால், தனியார் பாலுக்கு நுழைவு வரி விதித்தால் ஆவின் பால் விற்பனை அதிகரிக்க

2004 ஜூலை 31]

வாய்ப்பு உள்ளது. ஆகவே, தனியார் பாலுக்கு நுழைவு வரி விதிக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புகார்களுக்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்காக 10 கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இந்தக் கண்காணிப்புக் குழுக்கள் 17-12-2002 அன்று திடீர் சோதனை நடத்தியபோது, திருவாளர்கள் அல்லிமுத்து மற்றும் பன்னீர்செல்வம் என்கிற நபர்கள் பாலில் தண்ணீர் கலப்பதோடு, ஆவின் பால் உறைகளை மீண்டும் பயன்படுத்துவதைக் கண்டுபிடித்து, அவர்கள்மீது புகார் செய்து அண்ணா நகர் காவல் நிலையத்தில் குற்ற வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதைப்போலவே, 27-12-2002 அன்று நடத்திய திடீர் சோதனையின்போது திரு. கோவிந்தன் என்பவர் பாலில் தண்ணீர் கலப்பதுடன், ஆவின் பால் உறைகளை மீண்டும் பயன்படுத்தியதைக் கண்டுபிடித்து, அவர்மீது புகார் செய்து, ஆதம்பாக்கம் காவல் நிலையத்தில் குற்ற வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதுபோன்ற தவறுகள் மீண்டும் நடக்காவண்ணம் கண்காணிக்கப்பட்டு வருகிறது. தவறிழைத்தவர்கள்மீது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பாரபட்சமற்ற கடுமையான நடவடிக்கையை எதிர்வரும் காலத்திலே எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, இப்பொழுது தமிழகத்திலே மக்களுடைய தேவைக்குப் போதுமான அளவிற்குப் பால் உற்பத்தி இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

முற்பகல் 11-20

மேலும் தனியாருடைய பாலினுடைய தரத்தைச் சோதிப்பதற்கு ஏற்கெனவே பால் வளத் துறையின் கட்டுப்பாட்டில் அதற்குரிய வசதிகள் இல்லாமல் இருந்த நிலையை மாற்றி, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின் அடிப்படையில் 31-3-2004 முதல் ஒரு தரக் கட்டுப்பாட்டு ஆய்வகத்தைச் செயல்படுத்துகிற ஒரு வாய்ப்பை இந்தத் துறைக்கு அம்மா அவர்கள் ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள். அந்தத் தரக் கட்டுப்பாட்டு ஆய்வகத்தின் மூலமாக இதுவரை 51 பால் மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டிருக்கின்றன. அதிலே 26 தனியாருடைய பால் மாதிரிகளும் பரிசோதிக்கப்பட்டிருக்கின்றன.

இதுபோன்ற தனியார் பால் நிறுவனங்கள்மூலம் மக்களுக்கு விநியோகிக்கப்படுகிற பாலின் தரம் பால் வளத் துறையின் மூலமாகவும், நகராட்சி, மாநகராட்சிகள் மூலமாகவும் தேவையானபொழுது பரிசோதிக்கப்பட்டு வருகிறது. அப்படி எங்காவது அதிலே குறை இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர்கள் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அதற்குரிய நடவடிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிச்சயம் எடுக்கும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 119, திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.*

119—

பேருந்து நிலையம்

***9188—திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போக்குவரத்து நெரிசல் காரணமாக வாழப்பாடி பேருந்து நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) வாழப்பாடி பேருந்து நிலையத்தில் தற்போது போக்குவரத்து இடையூறு இல்லாமல் விரிவாக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. மேற்படி பேருந்து நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றம் செய்வதற்கு வாழப்பாடி பகுதியில் போதுமான இட வசதி இல்லை. வாழப்பாடி பேருந்து நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றம் செய்வதற்கான அவசியமும் எழவில்லை.